


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 19.11.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- தமிழ்நாடு அரசு, விரைவில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு **பயோமெட்ரிக் வருகைப் பதிவு** முறையை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த உள்ளது. இது தொடர்பாக மாநில அரசானது அரசாணை ஒன்றை பிறப்பித்துள்ளது.
  - இதன் சோதனைத் திட்டமானது போரூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெரம்பலூர் அரசு பள்ளி ஆகியவற்றில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- 2019 ஆம் ஆண்டின் இந்தியக் குடியரசு தினவிழா அணி வகுப்பில் “தலைமை விருந்தினராக **(Chief Guest at the 2019 Republic Day Parade of India)** தென்னாப்பிரிக்கா நாட்டின் அதிபர் “சிரில் ராமபோசா்” பங்கேற்க உள்ளார்.
  - தென்னாப்பிரிக்கா நாட்டில் இருந்து இந்திய குடியரசு தினவிழா அணி வகுப்பில் பங்கேற்கும் **இரண்டாவது** தலைவர் **“சிரில் ராமபோசா”** ஆவார். இதற்கு முன்னர், முன்னாள் தென்னாப்பிரிக்கா அதிபர் “நெல்சன் மண்டேலா” 1995 ஆம் ஆண்டு அணி வகுப்பில் தலைமை விருந்தினராக பங்கேற்றார்.

- புற்றுநோய் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்ந்து ஒப்பந்தத்தில் **இந்தியா மற்றும் இங்கிலாந்து (UK) நாடுகள்** கையெழுத்திட்டுள்ளன.
  - இந்த ஐந்தாண்டு முன்முயற்சிக்கு, இந்தியாவின் பயோடெக்னாலஜி துறை **(DBT)** மற்றும் இங்கிலாந்தின் கேன்சர் ரிசர்ச் இங்கிலாந்து **(CRUK)** ஆகியவை இணைந்து செயலாற்ற உள்ளன.

- இளைஞர்களை கூட்டுறவு வணிக முயற்சிகளுக்கு ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்ட, தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் **(NCDC – National Cooperative Development Corporation)** “யுவ சஹாகர்” **(Yuva Sahakar)** என்ற கூட்டுறவு தொழில் நிறுவன ஆதரவு மற்றும் புத்தாக்கத் திட்டத்தினை மத்திய வேளாண் மற்றும்

விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- இந்த திட்டங்களுக்கான செலவினங்களில், SC/ST மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற சிறப்பு பிரிவுகளில் உள்ளோருக்கு 80% நிதியும் மற்றவர்களுக்கு 70% நிதியும் அளிக்கப்படும்.

## உலக நிகழ்வுகள்

- இந்தியா – சீனா எல்லை விவகாரங்கள் தொடர்பான இரு நாடுகளின் சிறப்பு பிரதிநிதிகள் பங்கேற்கும், **21-வது சுற்றுப் பேச்சுவார்த்தை வரும் நவம்பர் 23 மற்றும் 24** ஆகிய தேதிகளில் சீனாவின் துஜங்யான் நகரில் நடைபெற உள்ளது.
  - இப்பேச்சு வார்த்தையில் இந்தியாவின் சார்பில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் **அஜித் தோவல்** பங்கேற்க உள்ளார்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **கேரளா மாநிலத்தில்** கல்வி முறையை முழுவதும், டிஜிட்டல் மயமாக்கும் முதன்மை முயற்சியாக, ஆசிரியர் பயிற்சியை இணையம் மூலம் பெறும் வகையில் **"கூல்"** என பெயரிடப்பட்டு உள்ள, திறந்த நிலை கல்வி பயிற்சி திட்டத்தை, கேரள அரசு அறிமுகம் செய்துள்ளது.
  - இதற்கான திட்டங்களை, **கைட்** எனப்படும், கேரள கல்வியியல் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

## நியமனங்கள்

- மத்தியப் பிரதேச மாநில உயர்நீதிமன்றத்தின் 24-வது தலைமை நீதிபதியாக **"நீதிபதி சஞ்சய் குமார் சேத்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அம்மாநிலத்தின் ஆளுநர் ஆனந்தி பென் படேல் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
  - மத்தியப் பிரதேச மாநில உயர்நீதிமன்றத்தின் முதன்மை இருக்கை **"ஜபல்பூர்"** நகரில் உள்ளது. ஜபல்பூர் உயர்நீதிமன்றம் நவம்பர் 1, 1956ல் நிறுவப்பட்டது.

## விருதுகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான **"வாழ்நாள் சாதனையாளர் விருது"** டாக்டர் மார்த்தா ஃபரெல் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - பெண் சமத்துவம், பெண்களின் அதிகாரமளித்தல் மற்றும் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு ஆகியவற்றிற்காக தனது வாழ்நாள் முழுவதும் பணியாற்றியதற்காக மறைந்த **"டாக்டர். மார்த்தா ஃபரெல்"** அவர்களுக்கு, **புது டெல்லியில்** நடைபெற்ற 6-வது இந்திய சமூகப்பணி மாநாட்டில் "வாழ்நாள் சாதனையாளர் விருது – 2018" வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- சாலை போக்குவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உலக தினம் நவம்பர் 18 **(World Day of Remembrance for Road Traffic Victims):**
    - சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டு தோறும் நவம்பர் 18 அன்று சாலை போக்குவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உலக தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
    - 2018 சாலைப் போக்குவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உலக தின முழக்கம் (**WDOR 2018 Slogan**):
    - "சாலைகளின் கதைகள்" (**Roads have Stories**)